DINA MANI
Date. 06/01/19

# பன்னாட்டு நிறுவனங்கள் பிளாஸ்டிக் உறையில் விற்பனை

சென்னை, ஜன.5: பன்னாட்டு நிறுவனங்கள் பிளாஸ்டிக் உறைகளில் பொருள்களை விற்பது கவலையளிப்பதாக பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

மக்களுக்கு எல்லையில்லா நன்மைகளைத் தரும் இயற்கைக்கும், சுற்றுச்சூழலுக்கும் பிளாஸ்டிக் பொருள்களைவிட மோசமான எதிரி இருக்க முடியாது. அதனால்தான் பிளாஸ்டிக்கை மனிதகுலத்தின் எதிரி என்று விமர்சித்து வருகிறேன்.

இந்த நிலையில், பிளாஸ்டிக் பொருள்களுக்கான தடை புத்தாண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், அனைத்துத் தரப்பினரும் அதற்கு ஒத்துழைப்பு அளிப்பது ஆனந்தமளிக்கிறது.

பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்திப் பழகிப்போன மக்களுக்கு இது தொடக்கத்தில் சற்று சிரமத்தைக் கொடுத்தாலும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக இதை மகிழ்ச்சியுடன் மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

அதே சமயம், பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் இன்னும் பிளாஸ்டிக் உறைகளில் அடைத்து விற்கப்படுவது சற்று கவலையளிக்கிறது.

இதையும் மாற்றி தமிழகத்தில் பிளாஸ்டிக்குக்கு முழுமையான தடை விதிக்கப்படும் நாளே எனது கனவு நிறைவேறும் நாளாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.